# ஜனங்களே! மனந்திரும்புங்கள், உங்களுக்கு சமயமிருக்கும்போதே, இப்பொழுதே ஒப்புரவாகுங்கள்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: **பத்மு தீவு தரிசனம்,** டிசம்பர் 4, 1960, இந்தியானா, அமெரிக்கா

210. இப்பொழுது, பாதை விலகிச் செல்கிற வறிய ஆத்துமாவே, அப்பெருவெள்ளத்திற்குள் அலைந்து செல்கிற ஆத்துமாவே, ஜாக்கிரதையாயிரு. அப்பொழுது உன்னை இரட்சிக்க ஒன்றுமில்லை என்பதை நீ அறிய வரும்போது அது மிகவும் பயங்கரமாயிருக்கப் போகிறது. அப்பொழுது நீ இரட்சிக்கப்பட முடியாது, உனக்கு முன்பாக உன்னுடைய அழிவானது இருக்கிறது என்பதை நீ அப்பொழுது அறிவாய். அதை நீ அறிந்த சில நிமிடங்களுக்குள்ளாகவே, "அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று, பிசாசுக்காகவும், அவனது தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திய அக்கினிக்குள் போய் மாளுங்கள்" என்ற சப்தமானது கேட்கும். இந்த மகத்தானதை விட்டு விலகிச் செல்வதால்,

அந்நாளில், நீங்கள் இவ்விதமான அநேகக் கூட்டங்களின் சப்தங்களையெல்லாம் ஒருசேர பெரிய நீர்வீழ்ச்சியின் பெருவெள்ளத்து இரைச்சலைப் போல் கேட்பீர்கள்.

**ஓ, எவ்வளவு பயங்கரமானதாக அது இருக்கப்போகிறது! அது திகில் சூழ்ந்ததாக இருக்கப் போகிறது. அவ்வாறு உங்களுக்கு சம்பவிக்க இடம் கொடுக்க வேண்டாம், ஜனங்களே! மனந்திரும்புங்கள், உங்களுக்கு சமயமிருக்கும்போதே, இப்பொழுதே ஒப்புரவாகுங்கள்.**

211. நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். எப்பொழுதும் பசுமையாயிருக்கும் மரத்தின் கீழ் அமர்ந்து, சலசலவென அமைதியாக ஓடிவரும் நீரோடையின் இனிய ஓசையைவிட கேட்பதற்கு இனிமையானது வேறென்ன உண்டு, நங்கூரமிட்ட ஒரு மனிதனுக்கு? அது தேவனுடைய சப்தத்தோடு உன்னதங்களில் வீற்றிருக்கும் அந்த சபைதான், அது அவ்வாறு இனிமையாக அவர்களோடு

பேசுகிறதாயிருக்கிறது, அது என்னவென்று கண்டீர்களா?

**அது பாவிக்கு ஆக்கினையாகவும், இரட்சிக்கப்படுகிறவருக்கு ஆசீர்வாதமாகவும் உள்ளது. கிறிஸ்து இயேசுவாகிய கன்மலையிலே பாதுகாப்பாக தன் படகை நங்கூரமிட்டுக் கொண்டவன் அமர்ந்து செவி கொடுக்கிறான், அவன் இளைப்பாறுகிறான். அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசியுங்கள்.**